இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 06 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 31 – சனிக்கிழமை 16 ஆகஸ்ட் 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 06 : Thiruvalluvar Year - 2056 - Aadi 31 - Saturday 16 August 2025 - Madurai 16 Pages ₹ 5.00



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து சுதந்திரத் திருநாள் சிறப்புரையாற்றினார்.

## அதிகாரம் - நிதிப் பகிர்வில் மாநில அரசுகளின் பங்கை மீட்டெடுத்திட

# அரசியல் சட்டபூர்வ நடவடிக்கைக்கு இதுவே தருணம்!

## சுதந்திரத் திருநாள் உரையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஆக.16-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சுதந்திரத் திருநாளையொட்டி, நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் உரையில் “அதிகாரம் - நிதிப் பகிர்வில் மாநில அரசுகளின் பங்கை மீட்டெடுத்திட அரசியல் சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு இதுவே தக்க தருணம்!” என்று குறிப்பிட்டார்.**

**சென்னை - கோட்டை கொத்தளத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

“தாயின் மணிக்கொடி பாரீர்! அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!”

- என்று நாம் தலைநிமிர்ந்து - நெஞ்சு நிமிர்த்தி பாட பாடுபட்ட விடுதலை வீரர்களையும் - அவர்களது குடும்பத்தினரையும் வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு அப்பாவு அவர்களே!

துணை முதலமைச்சர் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !

மாண்பமை நீதி அரசர்களே!

சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே!

காவல் துறைத் தலைவர் உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகளே!

விடுதலைப் பெருவிழாவைக் கொண்டாடும் பேரன்புக்குரிய தமிழ்நாட்டு மக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த விடுதலை நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கும் அதே வேளையில், நாம் இன்று விடுதலைக் காற்றை சுவாசிக்கக் காரணமாய் விளங்கும் தியாகிகளைப் போற்றி, அவர்களது உன்னத நோக்கங்கள் நிறைவேற நாளும் உழைக்க உறுதி எடுத்துக்கொள்வோம்.

**முதல்வர்கள் தேசியக் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் கலைஞர்!**

இங்கு பட்டொளி வீசிப் பறக்கும் நமது தேசியக் கொடியை, நான் மட்டுமல்ல - அனைத்து மாநில முதலமைச்சர்களும் இந்த நாளில் ஏற்றுவதற்கான ஜனநாயக உரிமையை 1974ஆம் ஆண்டு இந்தியாவின் அனைத்து முதலமைச்சர்களுக்கும் பெற்றுத் தந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டை ஐந்து முறை ஆட்சி செய்த முத்தமிழறிஞர் கலைஞரின் வழித்தடத்தில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியில், ஐந்தாவது ஆண்டாக தேசியக் கொடியை ஏற்றி வைக்கக்கூடிய வாய்ப்பை நான் பெற்றமைக்குப் பெருமை அடைகிறேன்! இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாட்டின் பன்முகத்தன்மையின் அடையாளமாக விளங்கும் மூவண்ணக் கொடிக்கு கம்பீரமாக வணக்கம் செலுத்துவதும், தியாகிகளைப் போற்றுவதும், நமது வாழ்நாள் கடமை மட்டுமல்ல; நாட்டுக்கும், தியாகிகளுக்கும் செலுத்தும் மரியாதை!

குமரி முதல் இமயம் வரை விரிந்த இந்த இந்திய நாட்டின் குறிப்பிட்ட சிலரோ சில பகுதியினரோ மட்டும் போராடிப் பெற்றதல்ல இந்த விடுதலை. நாடு முழுவதும், அனைத்து மாநில மக்களும், அனைத்து தேசிய இன மக்களும், அனைத்து மொழியினரும், அனைத்து மதப் பிரிவைச் சேர்ந்தவர்களும், அனைத்துப் பண்பாட்டைப் பின்பற்றுபவர்களும், தங்களது வியர்வையை - ரத்தத்தை உணர்வை - உயிரைக் கொடுத்து பெற்றது இந்த விடுதலை!

**தியாகத்தில், போராட்டத்தில் சளைத்ததல்ல தமிழ்நாடு!**

அதனால்தான், ‘அனைவருக்குமான இந்தியாவாக’ நமது நாடு

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## நாட்டைக் கட்டமைப்பதற்கான

# மன உறுதியை இந்நாளில் மேலும் வலுப்படுத்திக் கொள்வோம்!

### சுதந்திர தின திருநாள் விழாவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஆக. 16-**

**சுதந்திரத் திருநாள் விழாவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-**

சக குடிமக்கள் அனைவருக்கும் எனது இனிய விடுதலை நாள் வாழ்த்துகள். மக்களாட்சி திருடப்பட முடியாத, ஒவ்வொரு குடிமகனின் வாக்குக்கும் மதிப்பு இருக்கிற, வேற்றுமையே நமது பெரும் வலிமையெனக் கொண்டாடப்படுகிற நாட்டினைக் கட்டமைப்பதற்கான மனவுறுதியை இந்நாளில் நாம் மேலும் வலுப்படுத்திக் கொள்வோம்!

உண்மையான விடுதலை என்பது மதவெறியை நிராகரிப்பது, பாகுபாடுகளுக்கு முடிவு காண்பது, விளிம்பு நிலையில் உள்ளோரைப் பாதுகாப்பது! ஒவ்வொரு மனிதரும் சமத்துவத்தோடும், மாண்போடும், மரியாதையோடும் வாழ முடிகிற வகையில் நமது விடுதலைப் போராட்ட வீரர்கள் காண விரும்பிய கொள்கைகளை உயர்த்திப் பிடிப்பது தான் உண்மையான விடுதலையாக இருக்கும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களுக்கு தகைசால் தமிழர் விருதுடன், 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழை வழங்கிச் சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.